# யாழ். நகரில் சைக்கிளில் இருவர் செல்ல அனுமதி

விலை சதம் 25 Registered as a Newspaper in Sri Lanka

# ஈழநாடு

மலர் 16 The Eelanadu [illegible] 139

யாழ்ப்பாணம் ஆனி 18 ஜ. ஆனி 11 செவ்வாய்க்கிழமை 2-7-74

2-JUL 1974 JAFFNA COLLEGE UNITED PRESBYTERIAN MISSION LIBRARY

யாழ்ப்பாணம், செவ். யாழ்ப்பாணத்தில் சைக்கிளில் இருவர் செல்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எரிபொருள் விலை யேற்றம் காரணமாக பொலிசாரும், யாழ். மாநகரசபையினரும் மேற்கொண்ட நடவடிக்கைகளின் பயனாக இவ்வித வசதி அளிக்கப்பட்டுள்ளது.

இத்தகவலை போக்குவரத்து பொலிஸ் பொறுப்பதிகாரி திரு. எஸ். சேனாதிராஜா நேற்று தெரிவித்தார்.

யாழ்ப்பாண மாநகரசபை பகுதிக்குள் அமுலில் இருந்து வந்த சைக்கிளில் இருவர் செல்வதற்கான தடை விதி நீக்கப்பட்டுள்ளதாகவும் வாகனப் போக்குவரத்து விதியை அனுசரித்து சைக்கிள் ஓட்டிகள் நடந்துகொண்டால் விபத்துக்களைத் தவிர்க்க முடியும் என்றும் பொலிசார் அறிவிக்கின்றனர்.

பொலிஸ் அதிபர் ஜே. டபிள்யூ. டி. ஆரியசிங்கா, யாழ். மாநகர முதல்வர் திரு. அல்பிரட் ரி. துரையப்பா போக்குவரத்து பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. எஸ். சேனாதிராசா ஆகியோர் கலந்துகொண்ட மாநாட்டில் இவ்விதம் முடிவு எடுக்கப்பட்டது.

எரிபொருள் விலை அதிகரித்திருப்பதால் சைக்கிளில் இருவர் பயணம் செல்வதற்கு யாழ். மாநகரசபை எல்லைக்குள் அனுமதிக்கவேண்டும் என்று கோரும் தீர்மானம் ஒன்றும் மாநகரசபைக் கட்டமொன்றில் நிறைவேற்றப்பட்டிருந்ததும் தெரிந்ததே.

கண்டி, காலி மாநகரசபை பகுதிகளிலும் சைக்கிளில் இருவர் செல்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுவிட்டதாகவும் பெற்றோல் விலை அதிகரிப்பை தொடர்ந்து இவ்வசதி அளிக்கப்பட்டுள்ளது என்றும் பொலிஸ் வட்டாரங்கள் கூறின. (ஈ)

## நிற்சாமத்தில் ஆயுதப் பொலிஸ் திடீர் முற்றுகை

### வீடுவீடாகச் சோதனை; எதுவும் கிடைக்கவில்லை: வீடுகள் காலி

யாழ்ப்பாணம், செவ். நேற்று அதிகாலை பொலிஸ் அதிபர் திரு. ஆரியசிங்கா தலைமையிலான சுமார் நூற்றைம்பது பேர்கொண்ட ஆயுதம் தாங்கிய பொலிஸ் கோஷ்டி சங்கானை நிற்சாமம் பகுதியில் உள்ள சகல வீடுகளையும் முற்றுகையிட்டு திடீர் சோதனை நடத்தியது.

நிற்சாமம் பகுதியில் நேற்று முன்தினம் நடைபெற்ற துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தைத் தொடர்ந்து இந்த திடீர் சோதனை நடந்தது. இச்சம்பவத்துக்குப் பயன் படுத்தப்பட்ட துப்பாக்கியை மீட்கும் பொருட்டும், மற்றுமிருசந்தேக நபர்களைக் கைது செய்யும் பொருட்டும் பொலிசார் நிற்சாமம் பகுதியை முற்றுகையிட்டனர். வேறு ஆயுதங்கள் இருப்பதாகக் கிடைத்த தகவலும் இதற்குக் காரணம் என்று கருதப்படுகிறது.

யாழ். மாவட்ட பொலிஸ் அதிபர் திரு ஜே. எம். டி. ஆரியசிங்கா, உதவிப் பொலிஸ் சுப்பிரிண்டன்கள் முதலியோரின் நேரடிக் கண்காணிப்பின்கீழ் இத்திடீர் முற்றுகையும் சோதனையும் நடந்தது. பத்து பொலிஸ் இன்ஸ்பெக்டர்கள் உட்பட சுமார் 150 பொலிசார் இக்கோஷ்டியில் அங்கம் வகித்தனர். அனைவரும் ஆயுதம் தாங்கியபடியிருந்தனர்.

நிற்சாமப்பகுதி வீடுகள் சங்கானை பஸ்நிலையம் அதுகுள்ள கடைகள் அனைத்தும் சோதனையிடப்பட்ட போதிலும் ஆயுதங்கள் எதையும் கைப்பற்றமுடியவில்லை. அதுதவிர இங்கு சில தினங்களுக்குமுன்னர் நடைபெற்ற கலவரம் தொடர்பாக தேடப்பட்டுவந்த ஏனைய மூன்று சந்தேகநபர்களையும் இத்திடீர் சோதனையின் போது கைது செய்ய முடியவில்லை.

கலவரத்தின் போது வீடுகளை விட்டு வெளியேறியவர்கள் இன்னும் திரும்பவில்லை

(4-ம் பக்கம் பார்க்க)

### 'பூட்டோ ஏன் டாக்கா வரவேண்டும்?'

டாக்கா ஜூன் 1

பாகிஸ்தான் பிரதமர் ஜுல்பூட்டோவுடன் பங்களாதேஷ் பிரதமர் ஷேக் முஜிபுர் நடாத்திய பேச்சுவார்த்தைகள் தோல்வியடைந்தது குறித்து பங்களாதேஷ் வருத்தம் தெரிவித்துள்ளது.

டாக்கா வந்த பாக். பிரதமரை தலைமையிலான குழுவுடன் ஷேக் இருபிரச்னைகள் குறித்து பேச்சுவார்த்தை நடாத்தினார்.

இத்தோல்வி குறித்து பங்களாதேஷ் இன்றைய செய்தி ஏடுகள் பூட்டோவின் போக்குக் குறித்து கண்டனம் தெரிவித்து தலையங்கம் எழுதியுள்ளன.

விட்டுக்கொடுத்து பேச்சுவார்த்தை நடாத்தியும், பூட்டோ உடன்பாட்டுக்கு வரவில்லை. அப்படியானால் பூட்டோ எதற்காக டாக்கா வரவேண்டும்? என்று பங்களாதேஷ் வானொலி கேட்டது.

### சப் இன்ஸ்பெக்டருக்கு லஞ்சம் கொடுத்தாராம் நெடுந்தீவுவாசி றிமாண்டில்

யாழ்ப்பாணம், செவ். கள்ளக்கடத்தலில் ஈடுபட்டிருந்தபோது பொலிசாருக்கு லஞ்சம் கொடுத்ததாகக் கூறப்படும் நெடுந்தீவைச் சேர்ந்த ஒருவர் பொலிசாரால் கைது செய்யப்பட்டு றிமாண்டில் வைக்கப்பட்டுள்ளார். குறிகாட்டுவானில் இச்சம்பவம் நடந்தது.

குறிகாட்டுவானிலிருந்து இரண்டு முடை கராம்பைக் கடத்த முயன்றதாகக் கூறப்படும் ஒருவரை அங்கு கடமையிலிருந்த காங்கேசன்துறைப் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த சப் இன்ஸ்பெக்டர் தயானந்தா விசாரணைக்குட்படுத்தியதாகவும் அப்போது அந்த நபர் லஞ்சம் கொடுக்க முற்பட்டதாகவும், இருபத்தி நெடுந்தீவுக்குத் திடீர்விஜயம் மேற்கொண்டு குறிகாட்டுவான் துறைமுகத்திற்குச் சென்றிருந்த பொலிஸ் கப்பலில் திரு. எஸ். கே. சந்திரசேகராவின் கவனத்திற்கு அந்த சப் இன்ஸ்பெக்டர் கொண்டுவந்ததாகவும் பின்னர் திட்டமிட்டு லஞ்சத்தைப் பெறுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டதாகவும், 100 ரூபா நோட்டை குறிப்பிட்ட சந்தேகநபர் இன்ஸ்பெக்டரிடம் கொடுக்கும்போது பொலிஸ் கப்பலிலிருந்த திரு சந்திரசேகரா அந்நபரைக் கைது செய்ததாகவும் இச்சம்பவம் பற்றிக் கூறப்படுகிறது.

நெடுந்தீவைச் சேர்ந்த ஏ. கே. ராஜன் என்ற இந்நபர் தற்போது றிமாண்டில் வைக்கப்பட்டுள்ளார்.

இவர் லஞ்சக் கமிஷன் முன் விசாரணை செய்யப்படுவார் என்றும், பொலிசாருக்கு லஞ்சம் கொடுத்ததாக இவருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்படும் என்றும் பொலிஸார் [illegible] னர். (த.ச)

நிற்சாமம் துப்பாக்கிச் சூடு:

### நல்லப்பு சடலம் சகோதரரிடம் ஒப்படைப்பு

யாழ்ப்பாணம், செவ். சங்கானையில் நேற்று முன்தினம் பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியான க. நல்லப்பு என்பவரின் மரணவிசாரணையை மல்லாகம் மாஜிஸ்திரேட் திரு டி. ஜெகராஜதினம் நேற்று மாலை நடாத்தினார்.

சங்கானை நிற்சாமம் பகுதியில் சமீபத்தில் நடந்த கலவரங்களை அடுத்து தேடப்பட்டு வந்த சந்தேகநபரான நல்லப்பு என்பவரே துப்பாக்கிச்சூட்டுக்குப் பலியானவராவார்.

சங்கானை பிள்ளையார் விளையாட்டுமைதானத்தில் சந்தேகநபரை நேற்றுமுன்தினம் பொலிசார் மடக்கிப்பிடித்தனும், பொலிசாருக்கும், சந்தேகநபருக்குமிடையில் துப்பாக்கிப்பிரயோகம் நடைபெற்றதாம். இதன் பின்னர் காயங்களுடன் ஆஸ்பத்திரி எடுத்துச் செல்லும் வழியில் அங்கு மரணமானார்.

மரணவிசாரணையின் பின்னர் பிரேதம் சகோதரர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

### கண்மூடித்தனமான தமிழ்ப் படங்கள் தமிழக முதல்வர் தாக்கு

சென்னை, ஜூன் 1

"கண்மூடித்தனமாக காப்பியடித்து தரமற்ற தமிழ்ப் படங்களைத் தயாரிப்பதைக் கைவிடவேண்டும். இவை இளைஞர்களைக் கெடுத்து நாசமாக்குகிறது. கலாச்சாரம், சமூக வளர்ச்சியை மனதில் வைத்து இளைஞர்களின் சக்தியையும், மக்களின் எண்ணத்தையும் நல்லமுறையில் பயன்படுத்தக்கூடிய படங்களைத் தயாரிக்கவேண்டும்" [illegible] மரங்க உரிமையாளர் மாநாட்டில் முதல்வர் உரை [illegible] கருணாநிதி கூறினார். நிகழ்

### இன்று பேரவை கூடுகிறது

கொழும்பு, செவ். தேசிய அரசுப் பேரவை இன்று பிற்பகல் 2 மணிக்குக் கூடுகிறது.

அசோசியேட் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டின் திருத்த மசோதாவை பிரதமர் இன்று சபையில் சமர்ப்பிப்பார்.

### அம்பாறையில் மாணவர் கைகலப்பு

அம்பாறை, செவ். அம்பாறை தெழுந்துட்பக் கல்லூரியில் தமிழ்ச் சங்கம் ஒன்றை அமைக்க முற்பட்ட மாணவர்கள் பலர் தாக்கப்பட்டார்களாம். இதில் புது தமிழ் மாணவர்கள் காயங்களுக்குள்ளானதாகவும் சிலரது கை, கால் முறிந்துவிட்டதாகவும் சொல்லப்படுகிறது.

இச் சம்பவம் தொடர்பாக உடனடி விசாரணை செய்யுமாறு திருமலை, கடுப்பிட்டி பருத்தித்துறை, மட்டக்களப்பு தேசியபேரவை உறுப்பினர்கள் அவசர தந்திகளை பிரதமருக்கும், பதில் கல்வி அமைச்சருக்கும் அனுப்பி வைத்துள்ளனர்.

இக் கைகலப்பின் போது கடுமையாக தாக்கப்பட்ட மாணவர்கள் சிலர் மூன்று நாட்கள் வரை அறையொன்றில் அடைத்துவைக்கப்பட்டிருந்ததாகவும் சொல்லப்படுகிறது. (ஈ)

வாற்றினார்.

நல்ல தரமான படங்களை தயாரிக்கக்கூடிய நிலையை இரையரங்க உரிமையாளர்கள் செய்யமுடியும். அர்த்தமற்ற படங்கள் தமிழகத்தில் தயாரிக்கப்படும்நிலைக்கு முற்றுப்புள்ளிவைக்கப்படவேண்டும் என்றும் என்றார் திரு. மு. கருணாநிதி.

## மரண அறிவித்தல்

### நிற்சாமம் கந்தன் நல்லப்பு

எமது சகோதரரும் தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத் தலைமைக்குழுவைச் சேர்ந்தவருமான கந்தன் நல்லப்பு காலமானார். மரணச்சடங்கு இன்று செவ்வாய்க்கிழமை காலை பத்துமணியளவில் நிற்சாமத்தில் நடைபெறும். உறவினர், நண்பர்கள் இத்தகவலை ஏற்றுக் கொள்ளவும்.

—தகவல்: சகோதரர்கள் சார்பில் கந்தன் துரை 147

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மார்ட்டின் லூதர்கிங்கின் அன்னையும் குண்டுக்குப் பலி!

## தேவாலய ஆராதனையில் துப்பாக்கிச் சூடு

வாஷிங்டன், ஜூலை 1

காலஞ்சென்ற சிவில் உரிமைப்போராட்ட வீரர் டாக்டர் மார்ட்டின் லூதர் கிங்கின் அன்னையார் நேற்று தேவாலயம் ஒன்றில் வைத்து சுட்டுக்கொல்லப்பட்டார்.

அவருக்கு வயது 70. அட்லாண்டாவில் பாப்டிஸ்ட் தேவாலயம் ஒன்றில் காலை ஆராதனைகளின் போது டாக்டர் மார்ட்டின் லூதர் கிங்கின் அன்னையார் ஆலய இசைக்கருவியில் இசை வாசித்துக்கொண்டிருந்தார். திடீரென்று ஆலயத்துக்குள் நுழைந்த இளைஞன் ஒருவன் கண்மூடித்தனமாக துப்பாக்கியால் சுட ஆரம்பித்தான். லூதரின் அன்னையாருடன் ஆலய அதிகாரி ஒருவரும் துப்பாக்கிச்சூட்டுக்கு இரையானார். குண்டடிபட்ட வேறொரு பெண்ணும் படுகாயமடைந்தார். இதே ஆலயத்தில்தான் காலஞ்சென்ற டாக்டர் மார்ட்டின் லூதர் கிங் மத போதனைகள் செய்துவந்தார்.

கொலைகாரனை பொலிசார் இப்போது அடையாளம் கண்டுள்ளனர். ஒஹியோவைச்சேர்ந்த 21 வயதான பள்ளிக்கூடத்து மாணவன் ஒருவனே இந்தக் கொலையைச் செய்துள்ளான் என்று பொலிசார் கூறினர்.

டாக்டர் மார்ட்டின் லூதர் கிங்கும் தமது அன்னையாரைப் போலவே கொலைகாரன் ஒருவனால் சுட்டுக் கொல்லப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

## அம்மைப்பால் கட்டுதல் இந்தியாவில் கட்டாயமாகும்

புதுடில்லி, ஜூலை 1

பெரியம்மை நோய்த் தடுப்புக்கான பால் கட்டிக்கொள்வதை கட்டாயமாக்குவதற்கு சட்டம் கொண்டுவருவது பற்றி இந்திய அரசு ஆலோசித்து வருகின்றது.

மத்திய அரசு தனை மந்திரிகளில் ஒருவரான திரு யாதவ் இத்தகவலை வெளியிட்டார்.

அம்மைப்பால் கட்டிக் கொள்வதற்கு சிலர் மறுத்து வருவதின் காரணமாக இந்நடவடிக்கை எடுக்கப்படவிருப்பதாக தெரிவித்த துணை அமைச்சர் பிகாரில் கடந்த ஆண்டில் மட்டும் 10 ஆயிரம் பேர் வரை பெரியம்மைக்குப் பலியாகியுள்ளனர் என்றார்.

## "இசையிலும் சகலருக்கும் சமத்துவ அங்கீகாரம் வேண்டும்"

யாழ்ப்பாணம், செவ்.

இராமநாதன் நுண்கலைக் கல்லூரியின் ஐந்தாவதுப் பயிற்சிகளுக்கு தேறும் உள்வாரி மாணவர்களையும் வெளிவாரிமாணவர்களையும் சமரிசியில் அரசாங்கமும் பல்கலைக் கழகமும் அங்கீகரிக்கவேண்டும்.

இலங்கை இசைப்பேரவையின் உயர் தலைமைப்பீட விரிவுக் குழுவின் மூன்றாவது ஆண்டு சிறப்புக் கூட்டம் அண்மையில் வண்ணார்பண்ணையில் சங்கீதகலாநிதி திரு. கே. வேலாயுதம் தலைமையில் நடைபெற்றபோது மேற்கண்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

மேலும் அக்கூட்டத்தில், நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:

இசையாசிரியர்களாகும் தகைமைபெற்ற சகலரிசைப்பட்டதாரிகளும் சங்கீத சபையின் 6-ம் தர இசையாசிரியர் பரீட்சைக்கு தேறுதல் வற்புறுத்தப்படல் வேண்டும். ஒரு தனியார் நிறுவனத்தை இசைப் பேரவை நிறுவி அதன் மூலம் இசையாசிரியர்களுக்கு உபயோகமாகும் பரீட்சைகளை நடாத்த வேண்டும்.

சங்கீத பூஷணம் ஐயாக்கண்ணு தேவர், சங்கீத பூஷணம் பெ. சந்திரசேகரம், சங்கீதபூஷணம் சோமசுந்தரம், சங்கீத பூஷணம் விநாசித்தம்பி, சங்கீத கலாரத்தினம் வைத்தீஸ்வர ஐயர் ஆகியோருட்படப் பலரிசை பிரமுகர்கள் இக்கூட்டத்திற்குச் சமுக மளித்திருந்தனர்.

## விவசாய சுற்றுலா

யாழ்ப்பாணம், செவ்.

நல்லூர் சிவானந்த இளைஞர் விவசாயக் கழகக் கூட்டம் செல்வி லிங்கசௌந்தரி கனகலிங்கத்தின் தலைமையில் நல்லூர் திவ்யஜீவன சங்க மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றபோது விவசாய கழகங்களின் நன்மை தீமைகள்னும் பொருள்பற்றிய ஹாஷ்ய சம்பாஷணை இடம்பெற்றது. செல்வி எஸ். யோகாம்பிகை இளைஞர் விவசாயக் கழகம் பற்றிப் பாடிய பாடு ஒறை வாசித்தார். அடுத்த மாத முற்பகுதியில் விவசாய சுற்றுலா [illegible] மேற்கொள்வதென்று [illegible] செய்யப்பட்டது (ஈ)

## "குறிகாட்டுவானில் கலங்கரை விளக்கம் அமைக்கவும்"

கொழும்பு, திங்கள்

தீவுகளைச் சூழவுள்ள கடற்பகுதிகளில் மீன், அட்டை, சிங்க இறால் போன்றவற்றைப் பிடிக்கும் மீனவர்களின் பாதுகாப்பை முன்னிட்டு உடனடியாகவே குறிகாட்டுவான் துறைமுகத்தில் கலங்கரை விளக்கமும், அம்புலன்ஸ் இயந்திர வள்ளமும் அவசியமானது. பாதுகாப்புக்கு மாத்திரமல்லாது திசையை இலகுவாக அறிவதற்குக் கலங்கரை விளக்கம் பயன்படும்."

புங்குடுதீவு அபிவிருத்திச் சமூக சேவை சங்கத்தின் செயலாளர் திரு. ச. சதாசிவம் சேவியர் அரசாங்கத்திற்கு அனுப்பியுள்ள மகஜர் ஒன்றில் தெரிவிக்கப்பட்டவாறு தெரிவித்தார்.

அம்மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

"போதிய போக்குவரத்திற்குத் தக்கதாய் பாலங்களையும் ரோட்டுகளையும் விசாலமாக்கித் திருத்தி அமைப்பதுடன் கடற்பாலங்களுக்குப் போதிய பாதுகாப்பும் செய்யப்படவேண்டும்.

குடிநீரும் மின்சாரமும் தேவையான பகுதிகளுக்குத் தாமதமின்றி விநியோகிக்க வேண்டும். அத்துடன் வைத்தியசாலையில் இருந்தவரும் மருந்துத் தட்டுப்பாட்டை நிவர்த்திசெய்தல் மக்களுக்கு அதிக நன்மை பயக்கும். மேலும் வைத்தியசாலைக்குப் பாதுகாப்புச் சுவரொன்றும், காவலாளியும் அத்தியாவசியமாகும்."

மேற்குறிப்பிட்ட மகஜரின் பிரதிகள் தீவகத்திலுள்ள சகல கிராமசபைகளுக்கும், சனசமூக நிலையங்களுக்கும், இளைஞர் கழகங்களுக்கும் மற்றும் அபிவிருத்திச் சங்கங்களுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதுடன் அத்திறுவனங்களும் இக்கோரிக்கையை அனுசரித்து ஆவன செய்யும்மாறு கேட்கப்பட்டுள்ளது.

## இன்றைய பலன்

ஆனிமாதம் 18-ந் திகதி (2-7-74)

மேஷம்: பூமிப்பிணக்குகளால் வழக்குவிவகாரங்களில் மாட்டிக்கொள்ள நேரிடும். வாகனம் செலுத்துவோர் மிகவும் கவனமாக இருக்கவும்,

ரிஷபம்: தொழில் புரியுமிடத்தில் கருத்து வேற்றுமை தோன்றக்கூடும். கொடுக்கல் வாங்கல்மூலம் எதிரிகளை தேடிக்கொள்வீர்கள்.

மிதுனம்: பொருள் வரவுக்கும் இடமுண்டு. சுற்றுடலில் மதிப்பு உயரும். இறை அருளும் உண்டு. பொன்னாள் தினம்.

கடகம்: திடீர் நடவடிக்கை மேற்கொள்வதன்மூலம் நீங்கள் வருந்த நேரிடலாம். மேலதிகாரிகளுடன் பகைத்துக்கொள்ளவேண்டாம்.

சிம்மம்: அரசியலில் ஆர்வம் பிறக்கும். பிறருக்குள் திர்பாராதவகையில் அதிர்ஷ்டம் கிடைக்கும்.

கன்னி: செய்தொழிலால் சிறப்புக்கிடைக்கும். வழக்கு விவகாரங்களில் வெற்றியுண்டு. வெளிவிடத்திலிருந்து மகிழ்ச்சிதரும் செய்தியும் கிடைக்கும்.

துலாம்: நீண்டநாள் எதிர்பார்த்த நல்லதிருப்பம் ஏற்படமுடியும். குடும்ப விவகாரங்களில் பிணைப்பும்இருக்கும்.

விருச்சிகம்: இன்று உடல் நலம் சிறிது பாதிக்கப்படலாம். வாய்வுப் பதார்த்தங்களைத் தவிர்த்துக்கொள்ளவும். வைத்திய நடவடிக்கை விரும்பத்தக்கது.

தனுசு: எதிலும் ஏமாற்றம் தென்படும். அரசபயத்திற்கு இடமுண்டு. எதிலும் அடக்கத்துடனும் நிதானத்துடனும் இருக்கவும்.

மகரம்: தொழிற்துறையில் வெற்றி. விருந்தினர்கள் வருகையுடன் வேடிக்கைப்பலனுண்டு. திருப்திகரமான தினம்.

கும்பம்: வேண்டிய அளவிற்கு இன்று வெகுஜனப்பணம் துன்னும். இதயச்சுமை அதிகமும். சகல துறைகளிலும் முன்னேற்றமுண்டு.

மீனம்: உறவு முறைகளில் வெடிப்பு ஏற்படும். பணவிவகாரத்தின்மூலம் பகைதோன்றலாம். தொழிற் துறைகளில் அதிக கவனம் செலுத்தவும்.

சோதிடக்கலாநிதி திருமலை க. வேலுப்பிள்ளை

## வெள்ளிச் சிறப்பு

யாழ்ப்பாணம், செவ்.

"உலோகங்களில் சிறந்த ஒன்று வெள்ளி. இரகசியச் செல்வம் கூட்டுவது வெள்ளியாகும். நாள்களில் நல்லதை நினைக்க வழிதருவது வெள்ளிக்கிழமையாகும். எம்மதத்தவரும் ஏகோபித்து இறைவனை வணங்கும், நினைக்கும் விரதம் காக்கும் தினம் வெள்ளிக்கிழமையாகும்.

பசுவின் பால் தேவையானால் பசுவடியை தொட்டுக் கறந்தால்தான் பால் கிடைக்கும். அதுபோல் ஆத்ம நிறைவு தேவையானால் இறைவன் திருவடியை நினைத்தால் தொட்டால், தொண்டுசெய்தால்தான் ஆத்மபலிதமும்".

இவ்வாறு மேலைப்புலோலி மு. க. சதிர்காமத்தம்பி வல்வை சிதாம்பராக்கல்லூரி வெள்ளிப்பிரார்த்தனையில் விசேஷ உரையாற்றும்போது குறிப்பிட்டார்.

.....

## திருடிய சைக்கிளுடன் பிடிபட்டாராம்

ஆனைக்கோட்டை, திங்கள்

யாழ்ப்பாணத்திலுள்ள நிலையட்டர் ஒன்றிலிருந்து 250 ரூபா பெறுமதியான றலி சைக்கிளைத் திருடி கல்லுண்டாய் சந்தையடியில் விற்க முயன்றபோது சந்தேகத்தின் பேரில் கண்டியைச் சேர்ந்த ராசலிங்கம் (வயது 16) என்பவரை நல்லூர் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த கான்ஸ்டபிள் எஸ். ராஜரத்தினம் சைக்கிளுடன் கைதுசெய்து யாழ். நீதவான் திரு. கே. பாலசிங்கர் முன்னிலையில் ஆஜர்செய்யப்பட்டபோது அவரை அடுத்த மாதம் 7-ம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கும்படி நீதிபதி உத்தரவிட்டார். (அ)

## இருதரப்பும் இணங்கவேண்டும்

கொழும்பு திங்கள்

தொழில் அமைச்சரினால் பாராப்படுத்தப்பட்ட தொழிற் தகராறுகளில் நடுவர்கள்வழங்கும் தீர்ப்பினை ரத்துச் செய்வதனால் அதற்கு தகராறில் சம்பந்தப்பட்ட இருதரப்பினரும் சம்மதம் தெரிவித்தல் வேண்டும்.

இதுதொடர்பாக சட்டம் கொண்டுவருவதற்கு தொழில் அமைச்சர் திரு. மைக்கல் கொலின் வர்த்தனா அரசின் சம்மதத்தைக் கோரியிருக்கிறார்.


## சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

மிளகாய், வெங்காயம், நெல் ஆகியவற்றுக்குரிய இரும்பு நாரிலிருந்தும், பசளை வகைகளும் நியாயமான விலையில் பெற்றுக்கொள்ளலாம். முரீதஸா டிஸ்றிபியூட்டர்ஸ், (முகமதலி அப்துலனி அருகாமையில்) 5, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். போன்: 515. 256

தையல் சிங்கர் மெசின் (சாலியக்கி) சவுக்கார அச்சு யந்திரம், ஜேர்மன் யாழ். ஆகியவை விற்பனைக்குண்டு. 28-7-74-ந் திகதிக்கு முன் தொடர்பு கொள்ளவும். சு. ஏகாம்பரம், இளைப்பாறிய ஆசிரியர், சுதுமலை தெற்கு, மானிப்பாய். 321

### சேவை

தமிழ்-ஆங்கில கடிதங்கள் வரைய-அச்சடிக்க வருமானவரி ஆலோசனை பெற, வேலையற்றிருப்போர் வேலை பெற எமது ஸ்தாபனத்தின் புதிய திர்வாகிகளுடன் தொடர்பு கொள்ளவும். பிராஜ்மல் என்றப்பிறைஸ், தையல் முத்துமாரிவீதி, 213/1, மின்சாரநிலையவீதி, யாழ்ப்பாணம். 302

### தேவை

எமது நபால்மூலம் கல்வியயிற்றும் கல்லூரியின் அறுவல்களைக் கவனிக்க ஒவ்வொரு ஊரிலும் பகுதிநேர ஆசிரியர்கள்/ பிரதிநிதிகள் தேவை. தெக்ஸ் ரியூட்டறி, யாழ்ப்பாணம். 285

### விற்பனை

பிறவுன் ரோட், யாழ்ப்பாணத்தில் ஒரு பரப்புக் காணி கட்டிடத்துடன் விற்பனைக்கு இருக்கிறது. விபரங்களுக்கு:
எஸ். செல்வராஜா,
பிரக்காசி,
5, 3-ம் குறுக்குத்தெரு,
314 யாழ்ப்பாணம்.

### பதவி வெற்றிடம்— கணக்கு எழுதுனர்

வவுனியா தெற்கு தமிழ்ப் பகுதி பனநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்கு ஓர் கணக்கு எழுதுனர் தேவை.

தராதரம்: கூட்டுறவுப் பயிற்சி உயர்தரப் பரீட்சையில் எல்லாப் பாடமும் சித்தி அடைந்திருத்தல் வேண்டும். கணக்கு பதிவியலிலும், கணக்கியலிலும் விசேட சித்தி பெற்றிருக்கவேண்டும்.

வயது: 20 வயதிற்கும் 35 வயதிற்கும் கட்பட்டவராக இருக்கவேண்டும்.

சம்பளம்: ரூபா 180-304

6X10 8X8

அனுபவம்: கூட்டுறவுச் சமாசத்தில் அல்லது கூட்டுறவுச் சங்கத்தில் குறைந்தது மூன்று வருட கணக்கு அனுபவம் இருத்தல் வேண்டும்.

விண்ணப்பங்கள் 8-7-74 வரை ஏற்றுக்கொள்ளப்படும். விதிவுத்தபாலில் பொதுமுகாமையாளர், வ. தெ. த. பி. ப நோ. கூ. சங்கம், புகையிரத நிலைய வீதி, வவுனியா. என்னும் முகவரிக்கு அனுப்பப்படல்வேண்டும். விண்ணப்பத்தில் மேலே கேட்கப்பட்டுள்ள சகல விபரங்களும் கொடுக்கப்படல்வேண்டும்.

பொது முகாமையாளர்,
வவுனியா தெற்கு,
தமிழ்ப்பகுதி பல. நோ. கூ. சங்கம்,
வவுனியா. 143

### ஆண்டுவிழா

நல்லூர், திங்கள்

நல்லூர் மூத்தவிநாயகர்சன சமூக நிலையத்தின் 21வது ஆண்டுவிழா இம்மாதம் 13ந் திகதி கொண்டாடப்படவிருக்கிறது. (ஈ)


## சமாதான நீதவான்

யாழ்ப்பாணம், செவ்.

உடுப்பிட்டிப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் திரு. கோபால துரைசிங்கம் பருத்தித்துறைப் பகுதிக்குச் சமாதான நீதவானாக நியமனம் பெற்றுள்ளார். ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் சமரபாகுகிளைத் தலைவராகவுமிருக்கும் இவர் வல்வெட்டி மேற்குக் கிராம முன்னேற்றச் சங்கத் தலைவருமாவார். வேறு பல பொதுஸ்தாபனங்களுடனும் இவர் தொடர்புடையவர். (அ)

## நெறியாளர் சபைத்தேர்தல்

கிரிமலை, திங்கள்

தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளையின் நெறியாளர்சபைத்தேர்தல்கள் யாவும் இம்மாதம் 26-ம் 27-ம் திகதிகளில் நடைபெற இருக்கிறது. பெரும்பாலும் இத்தேர்தல்கள் [illegible] பார்க்கப்படுகிறது. (அ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



திருநெல்வேலி மகுத்தறிவு இயக்க நூல் நிலையத்து விழாவில் கலந்து கொண்டு புங்குடுதீவு இளந்தமிழர் மன்றத் தலைவர் திரு. எஸ். கே. மகேந்திரன் வரவேற்றதையும் விழாவுக்குத் தலைமைவகித்த முன்னாள் மேயரும் சட்டத்தரணியுமான திரு. சி. நாகராசா முன்னாழவேந்தன் ஆகியோர் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம்.

## கிளிநொச்சிச் செய்திகள்

கிளிநொச்சி, திங்கள் ...ளிநொச்சி வட்டாரப் ...சாலைகளுள் ஒரேயொரு ...சாலையில் 1974ம் ஆண்டு ...ன சிறுபோக வேளாண்மை செய்கை நடைபெற்றிருக்கிறது.

...ருத்திநகர் புரத்திலுள்ள ...து மகாவித்தியாலயத்துக்குச் சொந்தமான இரண்டு ...ர் நிலத்தில் இந்த சிறுபோகச் செய்கை செய்யப்பட்டுள்ளது.

...ணைமடுக்குளத்து நீர்ப்பாசனத்தை மூலமாக இப்பாடசாலை மற்றும் பாடசாலைக்கு முன்மாதிரியாக இந்த ...டு சிறுபோகத்தில் ஈடுபட்டுள்ளது.

...டசாலை அதிபரும் மற்றும் ஆசிரியர்களும் பிள்ளைகள் இந்த நெற்செய்கைக்கு பொறுப்பாக இருந்து ...மரித்து வருகின்றனர்.

### ...ஆயிரம் ஏதுக்கீடு

...ாயற்கை உரவகையோடு ...தாவை மையமாக வைத்து ...அரசினர் கூட்டுப்பசளை ...தல் என்னும் நவீன ...றையைக் கையாள நடவடிக்கை எடுத்துவருகிறார்கள், ...பயனாக நாடு முழுவதும் ...ள திட்ட அலுவலர்களில் கூட்டுப்பசளை தயாரிப்பு ...விவசாயிகளுக்குமானிய ...ரூபா 50/- வழங்கப்பட்டு ...றது.

...ன்தொடர்பாக யாழ். ...ட்டத்திற்கு சுமார் 50 ...ரம் ரூபாக்களை அரசு ...கியிருப்பதாக யாழ் ...ட்ட திட்ட அலுவலகர் திரு. சண்முகலிங்கம் ...வித்தார்.

...தன்பயனாக கிளிநொச்சி ...குதியில் கூட்டுப் பசளை ...ரிக்கும் ஒழுங்குகள் நடை...றுக்கொண்டிருக்கின்றன.

இந்த நடைமுறைகளை ... அலுவலர் திரு. வி. எஸ். ...மிநாதன் கவனித்துவருகிறார்.

...ரச்சிக் காரியாதிகாரி ...க் உள்ள விவசாயிகள் ...ப் பசளை தயாரிப்பதற்கு நடைமுறை ஒழுங்குகளை கரைச்சிப் பிரிவு அபிவிருத்தி உதவியாளர் திரு. வி. எஸ். சுவாமிநாதன் கவனித்து வருகிறார்.

கூட்டுப்பசளை தயாரிக்கும் எண்ணமுடைய விவசாயிகள் தங்கள் விண்ணப்பங்களை அபிவிருத்தி உதவியாளருக்கு அனுப்பிவைக்க வேண்டும்.

### விவசாயக் கருத்தரங்கு

'இயற்கையான கூட்டுப் பசளைகளை நாம் பயிர்களுக்கு பாவிப்போமானால் மண் வளத்தைப் பெருக்குவது மட்டுமல்ல பயிர்களைப் பல்வேறு நோய்களினி இருந்தும் காப்பாற்றிப் பலன் பல பெறும் வாய்ப்பு ஏற்படும்.

இவ்வாறு கனகபுரம் கனிஷ்ட வித்தியாலயத்தில் நடைபெற்ற விவசாயிகள் கருத்தரங்கிற்குத் தலைமைதாங்கிப் பேசிய கிளிநொச்சி விவசாயப் போதனாசிரியர் திரு. கே. நடராசா கூறினார்.

'எதிர்காலத்தில் அரசினர் செயற்கை உரங்களை விநியோகிக்க வாய்ப்பிருக்கும் என நாம் நம்பமுடியாது. ஆனால் நாம் முன்னையப் போல் பழைய முறைகளைக் கையாண்டு இயற்கைப் பசளைகளைப் பாவிக்க முன்வரவேண்டும்' என்று அவர் கூறினார்.

பரந்தன் நெல் ஆராய்ச்சி நிலைய அதிகாரிகள் திரு. எம். சோமசுந்தரம், நெல் உற்பத்தி ஆராய்ச்சியாளர் திரு. வி. தம்பியப்பா, பயிர்ப்பாதுகாப்பு அதிகாரி திரு. எஸ். தம்பிநாயகம், குடியேற்ற அதிபர் திரு. சி. தியாகராசா, விவசாய விரிவாக்க அதிகாரி திரு. ஆர். காசிநாதன் ஆகியோர் இந்த விவசாயிகள் கருத்தரங்கில் கருத்துரைகள் வழங்கினர்.

விவசாயிகள் சார்பில் பாடசாலை அதிபர் திரு. எஸ். பொன்னையா, கிராமசபைத் தலைவர் திரு. என். சோதிநாதன், கூட்டுறவுச் சங்கத் தலைவர் திரு. பே. பரராசசேகரன், கிராமசபை உறுப்பினர்கள் திரு. எப். சேவியர்,

## சிக்கிம் மன்னர் நாடு திரும்பினார்

புதுடில்லி, ஜூலை, 1

சிக்கிம் மன்னர் இந்திய தலைவர்களுடன் ஆலோசனைகள் கலந்த பின்னர் இன்று தமது நாட்டுக்குப் புறப்பட்டுச் சென்றார்.

சிக்கிம்மில் புதிய அரசியல் சட்டத்தை செயல் படுத்துவது தொடர்பாக தேசிய சட்டசபைக்கும் மன்னருக்குமிடையில் கருத்துவேற்றுமை ஏற்பட்டதாலும் மக்கள் ஆர்ப்பாட்டங்கள் அதிகரித்ததாலும் இந்தியத் தலைவர்களுடன் ஆலோசனைகள் நடத்துவதற்கு சோக்கியால் புதுடில்லிக்கு வந்திருந்தார். பிரதமர் நருமதா இந்திராகாந்தியுடன் அவர் இரு சுற்றுப் பேச்சுக்களை நடத்தினார். வெளிநாட்டமைச்சர் சர்தார் சுவரண்சிங்குடனும் ஆலோசனை கலந்தார்.

...

## கூட்டுறவாளர் தினவிழா

மாவிட்டபுரம், திங்கள் சர்வதேச கூட்டுறவுவாளர் தினவிழா எதிர்வரும் 6-ம் திகதி தெல்லிப்பழை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினால் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் கொண்டாடப்படவிருக்கிறது. (அ)

.....

## கண்ணுபுரம் குடியேற்றத்திட்ட அபிவிருத்தி

நல்லூர், திங்கள்

யாழ்ப்பாணம் கொட்டடியில் ஆரம்பிக்கப்பட்ட கண்ணுபுரக் குடியேற்றத் திட்ட அபிவிருத்தி வேலைகள் யாழ். மாநகர சபையாலும், யாழ். அரசாங்க அதிபர் யாழ். காரியாதிகாரி ஆகியோரது உதவியுடனும் மேற்கொள்ளப்பட்டுவருகிறது.

கடற்கரைக்கு அருகாமையில் உள்ள இக்குடியேற்றத் திட்டக் காணிகளில் கடல் நீர் புகாதபடி யாழ். மாநகர சபை சுவர்களைக் கொட்டி காணிகளின் மட்டத்தை உயர்த்தி வருகின்றது. கண்ணுபுரக் குடியேற்றச் சங்கம் யாழ். மாநகர சபையைக் கேட்டுக் கொண்ட கோரிக்கையை அடுத்து மேயர் திரு. ரி. அம்பிரட் துரையப்பா இந்நடவடிக்கையை மேற்கொண்டுள்ளார்.

இப்பகுதிக்கு மின்சாரம் வழங்குவதற்கான வேலைகளையும் மாநகரசபைமேற்கொண்டுள்ளது. (ஈ)

ஏ. பி. இராசதாசகம் ஆகியோர் கலந்துகொண்டனர்.

### எக்ஸ்-றே எடுப்பர்

பரந்தன் இரசாயன தொழிற்சாலை ஊழியர்கள் எக்ஸ்-றே படப்பிடிப்புக்குட்படுத்தப்படவிருக்கின்றனர். வெளிச்சறை மார்புநோய் சிகிச்சை நிலையத்தினர் விரைவில் இதனை மேற்கொள்ளவிருக்கிறார்கள். காங்கேசன்துறை சீமெந்துக் கூட்டுத்தாபன ஊழியர் உட்பட இவர்கள் ஆயிரத்திற்கு மேற்பட்டவர்களை எக்ஸ்-றே படம் எடுப்பர். (அ)

## பாக். அனுபவம்பற்றி ஷேக்அப்துல்லா

புதுடில்லி, ஜூலை 1

வகுப்புவாதக் கட்சிகளுக்கு சுதந்திர இந்தியாவில் இடமில்லையென்று மூன்றாண்டு காஷ்மீர் பிரதமர் ஷேக்அப்துல்லா கூறியிருக்கிறார்.

கூட்டமொன்றில் பேசிய அவர், அரசியலுடன் மதத்தைக் கலப்பதினால் பெரும் அபாயம் விளைகின்றது. பாகிஸ்தான் அனுபவங்களிலிருந்து இதை நாம் உணர வேண்டும் என்றார்.

.....

## மாலைதீவில் கடலட்டை பிடிக்க யோசனை

யாழ்ப்பாணம், செவ்.

மாலைதீவுக் கடற் பிராந்தியத்தில் கடலட்டை பிடிக்கும் சாத்தியக்கூறுகளை ஆராயும் பொருட்டு கடலட்டை பிடிப்பதில் ஆற்றலுள்ள மீனவர் குழு வொன்றினை வடமாகாண கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசம் மாலைதீவிற்கு அனுப்புவது பற்றி ஆலோசித்துள்ளது.

இக்கடற் பிராந்தியத்தில் ஏராளமாக கடலட்டை காணப்படுவதாகச் சமாசத்திற்குச் சுட்டிக்காட்டியதைத் தொடர்ந்தே இந்த ஆலோசனையை சமாசம் இவ்வாண்டிற்கான தனது செயற்படுதிட்டத்தில் உள்ளடக்கியுள்ளது.

இக்குழுவினரை அனுப்பும் முயற்சி இந்நாட்டு இசைவுடனே மேற்கொள்ளப்படவுள்ளது. (த.-ஈ)

## சீமெந்துத் தொழிலாளருக்கு சைக்கிள் டயர்

மாவிட்டபுரம், திங்கள்

காங்கேசன் சீமெந்து பொதுத் தொழிலாளர் யூனியன் சீமெந்து தொழிலாளர்களுக்கு சைக்கிள் டயர் விநியோகம் செய்துவருகிறது.

சைக்கிளில் வரும் தொழிலாளர்கள் சைக்கிள் டயர் கிடைக்காது பெரிதும் கஷ்டப்படுவதையடுத்துசீமெந்து பொதுத் தொழிலாளர் யூனியன் தொழிற்சாலை நிர்வாகத்தின் மூலம் சைக்கிள் டயர் பெற்று தொழிலாளர்களுக்கு விநியோகிக்கிறது. (அ)


ஸ்ரீதர் சினிமா — கிஷோர்குமார் - நூடான் நடித்த
(யாழ்ப்பாணம்)
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
சாலிரி-கா-நாம் காடி (ஹிந்தி)
CHALTI - KA - NAAM GAADI

றியோ — 4-வது வாரம்
(யாழ். நகரமண்டபம்) — ஜெய்சங்கர்—வாணிஸ்ரீ நடித்த
தினசரி 2-30, 6-30
அவசரக் கலியாணம்
8-45 only
THE 7 WINCHESTERS FOR A MASSACRE

வின்ஸர் — சிவாஜி—ஜமுனா
(யாழ்ப்பாணம்) — வீரப்பா—சரோஜாதேவி நடித்த
தினசரி 4 காட்சிகள்
தங்கமலை ரகசியம்
(புதிய கொப்பி)

ராணி சினிமா — சிவாஜி— ஜமுனா
[யாழ்ப்பாணம்] — நம்பியார் — ரங்கராவ் நடித்த
தினசரி 4 காட்சிகள்
நிச்சய தாம்பூலம்

நாகம்ஸ் — [கல்முனை]
தினசரி 6-30, இரவு 9-30
சனி, ஞாயிறு பி. ப 3-30
சிவாஜி - ஜெயலலிதா
பட்டிக்காடா பட்டணமா

வெலிங்டன் — தினசரி பி. ப. 3-30, மாலை 6-30 இரவு 9-30, சனி, ஞாயிறு காலை 10-30
(யாழ்நகர்)

ஸ்ரீ கிருஷ்ணா
[பண்டத்தரிப்பு]
தினசரி 6-30, இரவு 9-30
ஜெய்சங்கர் - சந்தரராஜன் நடித்த
நம்மகுழந்தைகள்

வெஸ்லி
[மானிப்பாய்]
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு பி. ப. 3-30
ஜெமினி - நிர்மலா
வெகுளிப்பெண்

சாந்தி (சங்கானை)
தினசரி 6-30, இரவு 9-30
ஞாயிறு பி. ப. 2-30
ஜெய்சங்கர்—சாவித்திரி
ஜக்கம்மா

REGAL Jaffna
Daily 4-45, 7, 9-30 p m.
New kind of Horror Film
HOUSE OF DARK SHADOWS
(Color)

இது ஒரு வழக்கமான கதை அல்ல, முற்றிலும் மாறுபட்ட கதை.
நலக்குரிய மனைவியை, தான் அடைவேண்டிய அன்புச் செல்வத்தை தேடிப் புறப்படும் ஒரு கோடீஸ்வரனின் கதை
கதை முனைக்கு கொண்டவளாக ஒரு பாலை அது யாரோ அவரோ—அவள்தான்.....
ராமன் தேடிய சீதை
எம். ஜி. ஆர். - ஜெயலலிதா
நம்பியார் · அசோகன் · நாகேஷ் · மனோரமா
டைரக்ஷன்: ஏ. நீலகண்டன் — இசை: எம். எஸ். விஸ்வநாதன்

லிடோ — சிவாஜி — பத்மினி நடித்த
[யாழ்ப்பாணம்]
தினசரி 4 காட்சிகள்
புனர்ஜென்மம்

3-வது ஜனத்திரள் வாரம்!
ராஜா - (யாழ்நகர்) தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
∴ இதுவரை எந்தப் படத்துக்குமில்லாத பெண்கள் கூட்டம்.
∴ 'பொன்னூஞ்சல்' படத்தில் எல்லாப் பாடலுமே தேனாக இனிக்கிறது.
∴ சிவாஜி-உஷாநந்தினி ஜோடியின் காதல்காட்சி வாலிபர்களையும், வனிதையர்களையும் இன்பத்திலாழ்த்தும்.
∴ நகரத்தின் நல்லபடம்! குடும்பத்துடன் பார்க்கவேண்டிய தித்தமிழ் காவியம்.
சிவாஜி, உஷாநந்தினி, முத்துராமன், ஏ. சகுந்தலா, சோ, மனோரமா,
'பொன்னூஞ்சல்'
டைரக்ஷன்: சி. வி. ராஜேந்திரன்
[இவரது பாடல்களும், சதுரங்கமும்]

யாழ். மனோஹரா திரையில்
தினசரி காலை 10-30, பி. ப. 2-30, மாலை 6-30, இரவு 10-00
ஜெய்சங்கர் - கே. ஆர். விஜயா - சோ - ஏ. சகுந்தலா
சுந்தரராஜன் - மனோகர் - வி. கே. ராமசாமி
மற்றும் பலர் நடித்த
★ வாயாடி ★
கதை, வசனம், டைரக்ஷன்: மதுரை திருமாறன்
[பாடல்களும் சதுரங்கமும் ரத்துச்செய்யப்பட்டுள்ளது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

வாழ்க்கையில் நாம் பல தவறுகளைச் செய்கிறோம்; பிறகு அவற்றிக்கு நாமே பெயர் சூட்டிவிடுகிறோம் அனுபவம் என்பதாக!

—கன் பியூஷஸ்.

ஈழநாடு
EELA NADU
2-7-74

## பரமேஸ்வராக் கல்லூரி

சைவ மரபு மிளிரும் திருநெல்வேலியில் சுமார் ஐம்பது ஆண்டுகளுக்குமுன் சைவப்பிள்ளைகளுக்கு ஆங்கிலக்கல்லூரியின் அவசியத்தை உணர்ந்த சேர். பொன்னம்பலம் இராமநாதன் நிறுவிய ஸ்தாபனமே பரமேஸ்வராக் கல்லூரியாகும்.

கல்லூரியின் வளர்ச்சியில் ஏற்றம் இறக்கம் இருந்த போதும், கடந்த அரை நூற்றாண்டு காலத்தில் அதன் குறிக்கோள் பெணப்பட்டு வந்ததை நாம் பெருமையுடன் ஒப்புக்கொள்ளவேண்டும். அது என்ன? கேயிலும் பாடசாலையும் இணைந்து இயங்கிவரும் கல்லூரியின் தனித்துவம் அதை நன்கு விளக்குகின்றது.

பரமேஸ்வராக் கல்லூரியைநிறுவிய சேர். பொன்னம்பலம் இராமநாதன் ஏனைய சைவக் கல்லூரிகளுக்கு இது ஒருமுன்மாதிரியாக அமைய வேண்டுமென்று விரும்பியிருப்பாரென்பதில் சந்தேகமில்லை. இதுமட்டுமல்ல; தெய்வநம்பிக்கையையே கல்வியின் பெரும் பயனாகக் கருதும் இக்கல்லூரி ஏனைய மதத்தினருக்கும் சம்மதமான கருத்தையே கடைப்பிடிக்கின்றது.

பரமேஸ்வராக் கல்லூரியைப்பக்கலைக்கழக வளாகமாகமாற்றி அமைக்கும் இவ்வேளையில் கல்லூரியின் பெற்றோரும் ஆசிரியரும் இதன் எதிர்காலத்தைப்பற்றிக் கவலைகொண்டிருக்கின்றனர். இதேவேளையில் இந்த மங்கலமான சூழலில் வளாகம் அமைப்பதை அவர்கள் மனமார வரவேற்கின்றனர்.

தனியார் பாடசாலைகளை அரசு கையேற்றபின் அவற்றின் ஆதமீக சூழ்நிலை அருகிப்போம் என்று அஞ்சினவர் பலர்; அதில் உண்மை இல்லாமலில்லை. சமயச்சார்பற்ற கல்வியே அரசாங்கப் பாடசாலைகளின் நோக்கமென்ற கருத்து சோஷலிஸம் பேசும் சில பகுதியினரிடையே இன்றும் நிலவுகிறது. ஆனால் அண்டைநாடாகிய இந்தியாவைப் போலல்லாமல் இலங்கையில் அரசாங்க பாடசாலைகள் தத்தம் சமயச்சார்பையும் மரபையும் பேணி வளர்க்கவேண்டுமென்ற கொள்கையையே நமது அரசு தொடர்ந்து கடைப்பிடிக்கின்றது.

எனவே இந்தக்கொள்கையின் சிறந்த சின்னமாக விளங்கிவரும் பரமேஸ்வராக் கல்லூரி, இடம்மாற வேண்டிய போதும் தொடர்ந்தியங்கவேண்டுமென்பதையே எவரும் விரும்புவர். ஆத்மீகத் தலைவர், அரசியல்வாதி, கல்விமேதை சேர் பொன்னம்பலம் இராமநாதன், மாதரும் சமுதாயத்தின் கல்வித் தேவையைப் பூர்த்திசெய்யும் பொருட்டு நாம் நிறுவிய கல்லூரி பக்கலைக்கழக வளாகமாக உயர்வதை விரும்புவாரென்பதனின்கருத்தேவையில்லை. அதே சமயம் தன்னந்தனியேதாம் கட்டிஎழுப்பிய கல்லூரியை அழிவிடாமல் காப்பது அதனைப் பரிபாலிக்கும்அரசினதும், அதன் பயனை அனுபவித்தவரும் மக்களினதும் பெரும் பொறுப்பென்று ஆவர் கொள்வார் என்பது நிச்சயம்

ஆதலால் அதே சூழலில் பரந்த காணிவசதியுடைய இடத்தில் சேர் பொன்னம்பலம் விட்டுச்சென்ற நிதிஉதவியுடன் அரசும் மக்களும் ஒன்றுபட்டு பரமேஸ்வராக்கல்லூரியை புனரமைப்பதே பொருத்தமானது என்பதுஎமது கருத்து.

கல்லூரி இடவசதியில் நெருக்கடி காணும் இக்காலத்தில் ஒருபெரும்கல்லூரி இல்லாமல் போவது நியாயமாகாது. எனவே தற்காலிகமாக முத்தமிழ்விழாத் தியாகராஜா பரமேஸ்வராக் கல்லூரிக்கு புகலிடமாக வருகின்றபோதும், பரமேஸ்வராக் கல்லூரிக்கென பொருத்தமான இடத்தில் தக்க கட்டிடவசதிகளைத் தேடும் பணியில் அரசு ஈடுபடவேண்டும்.

பக்கலைக்கழக வளாக அமைப்பில் தலையை உடைத்துக்கொண்டிருக்கும் அரசு இப்பணிக்கு ஆவனசெய்யுமென்று காத்திராமல், பழைய மாணவர்கள், பெற்றோர்கள், ஆசிரியர்கள், ஏனைய ஆதரவாளர்கள் ஒருங்குசேர்ந்து பரமேஸ்வராக் கல்லூரியை பாதுகாக்கும் முயற்சியில் உடனடியாக இறங்குவதே உசிதமாகும்.

# பிரிந்தவர் ஒன்றுகூட உதவிய கச்சதீவு

## புனித யாத்திரை ஏற்பாடு எப்படி இருக்கும்?

[நமது அரசியல் நிருபர்]

கச்சதீவு விஷயமாக இந்தியர் காட்டியுள்ள தாராள மனமும் அரசியல்ஞானமும் இனி இரு அண்டைநாடுகளின் நல்லுறவையும் பலப்படுத்தப் பெரிதும் உதவவேண்டும்.

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலுள்ள அந்தத் தீவு யாருக்குச் சொந்தம் என்பதுபற்றி பல வருடகாலமாக ஒரு தகராறு இருந்து வந்தது. இரு நாடுகளும் பிரிட்டனின் அரசியல் ஆதிக்கத்தில் இருக்கையில் இந்தப் பிரச்னை தலைதூக்கவில்லை. இருநாட்டு மக்களில் பலரும் வருடந்துக்கு ஒருமுறை அங்கு வந்து மாஸ்போர்ட், விஸா முதலிய தடைகளின்றி கூடி அந்தோனியார் திருவிழாவில் கலந்து கொள்ள முடிந்தது.

இரு நாடுகளும் அரசியல் விடுதலைபெற்ற பின்பு, இரு நாட்டு மக்களின் பிரயாண உரிமை தடைபட்டது. இரு தேசங்களும் பாஸ்போர்ட், விஸா முதலிய தடைகளைப் போட்டன. என்றாலும் கச்சதீவு ஒருபொதுபூமியாக இருந்து இருநாட்டவரும் அந்தோனியார் பெயராக் நேரில் சந்திக்க உதவி வந்தது. பகிரங்க ரகசியம்.

புதிய ஒப்பந்தம் ஏற்பட்டபின், இந்த யாத்திரை உரிமைகள் எவ்வளவு தூரம் நீடிக்கும் என்ற விவரங்கள் இனித்தான் தெரிய வேண்டும். இலங்கை-இந்திய பிரயாணத் தடையால் பல குடும்பங்கள் பிரிந்து புருஷன் மனைவியையும், மனைவி புருஷனையும் பார்க்க முடியாமல் பிரிந்து கிடக்கின்றனர். பிரிந்தவர்கள் தற்காலிகமாக ஒன்று கூட இதுவரை கச்சதீவுஉதவி வந்தது. புதிய ஏற்பாடு காரமாக அந்த வாய்ப்புக்குத் தடை ஏற்படின் அது பல குடும்பங்களின் சாதாரண மனித அடிப்படை உரிமையை மேலும் பறிப்பதாக இருக்கும்.

இருதேச நல்லுறவுகளும் பலப்பட வேண்டுமாயின் இருநாட்டு மக்களும் தாராளமாக ஒரு நாட்டிலிருந்து மற்றொரு நாட்டுக்குப் பிரயாணம் செய்ய வாய்ப்பு இருக்க வேண்டும். சுதந்திரம்பெற்றபின் அந்த வாய்ப்புப் பெரிதும் தடைபட்டது. காலனி ஆதிக்க காலத்தில் ஏராளமான இந்தியர்கள் இலங்கையில் குடியேற்றப்பட்டனர். இந்தியர்கள் மேலும் இங்கு தாராளமாக வரமுடிவதாயின் இங்கு அதிக இந்தியர் குடியேறி இந்நாட்டு மக்களின் பொருளாதாரம் பாதிக்கப்படும் என்ற அச்சம் இலங்கைக்கு ஏற்பட்டது இயற்கை. ஆகவே இலங்கையிலுள்ள இந்திய வம்சாவழியினரைக் கடுமானவரை இந்தியாவுக்குத் திருப்பி அனுப்பிவிடவும், அதிகமான இந்தியர் சிறப்பாகத் தமிழகத்திலிருந்து இங்கு யாத்திரைக்காகவும்கூட வரமுடியாமல்செய்யவும் நிர்வாகச்சட்டதிட்டங்கள்மூலம் முற்படப்பட்டது.

ஆனால் ரயில்வே மூலம் இலங்கையர்கள் இந்தியாவுக்குத் தாராளமாகச் செல்ல முடியாமல் செய்யப்பட்ட காரணமென்ன? விமான மூலம் "பீக்ஸ்" கட்டணம் செலுத்தி இந்தியாவுக்கு யாத்திரைசெய்ய அனுமதிக்கையில் அதே மாதிரி வாய்ப்பை ரயிலில் செல்லவும் ஏன் ஏற்படுத்தக் கூடாது! இன்றுள்ள இந்த ஏற்பாடு, பணக்காரர்களுக்கு மட்டும் யாத்திரை உரிமையை அளித்து, ஏழைகளுக்கு அந்த உரிமையை மறுப்பதாகவுள்ளது. இலங்கையிலே பெரு மக்களிடை இதனால் மனக்கசப்பும் ஏமாற்றமும் இருப்பது பகிரங்க ரகசியம். பொதுமக்கள் விரும்பாத இந்த வேற்றுமையை அரசாங்கம் இனியும் நீடிக்கத்தான் வேண்டுமா?

யாத்திரைத் தடைக்கு இரு முக்கியகாரணங்கள் கூறப்பட்டன. ஒன்று கள்ளக்குடியேற்றம் மற்றது அந்நியச் செலாவணி, கள்ளக்குடியேற்றம் இப்போது பெரிதும் குறைந்துவிட்டது. அந்தப் புகார் இப்போது இல்லை. உணவுப்பிரச்னை முதலியவை இதற்குக் காரணம். மனித அடிப்படை உரிமைகளில் முக்கியமான யாத்திரை விஷயமாக இந்தியாவுடன் பரஸ்பர ஒப்பந்தம் செய்துகொள்ள முடியுமாயின், செலாவணி பிரச்னை இதற்கு ஒரு தடையாக இல்லாமற் செய்யலாம்.

அமைச்சர்கள் மட்டும் வெளிநாடுகளுக்கு அடிக்கடி யாத்திரை செல்ல முடிகையில், தங்கள் சொந்தச் செலவில் இலங்கை மக்கள் அண்டையிலுள்ள ஒரே நாடான இந்தியாவுக்குமட்டுமாவது செல்ல முடியாமல் தடுக்கப்படுதல் தான் வேண்டுமா?

கச்சதீவு ஒப்பந்தத்துக்குப்பின், இருதேச உறவுகளும் மேம்படுமென்று எதிர்பார்ப்பது மிகையல்ல. அதற்கு முக்கிய அடையாளம், மக்களைப் பொறுத்தவரை, யாத்திரை உரிமையைப் பெறுவதே. இவ்விஷயமாக இனி இலங்கை அரசாங்கத்தின் மனப்பான்மை தாராளமாக மாறவேண்டும். பழைய சந்தேகங்களுக்கு இனியும் இடமுண்டா?

0 0 0

பிரிட்டனிலே குடியேறியுள்ளவர்களின் குடும்பங்கள் கூடுவதற்கு இதுவரை இருந்துவந்த தடைகள் இப்போது நீக்கப்பட்டுவிட்டனவாம். புருஷனோ, மனைவியோ அங்கு வரவும் குடும்பங்கள் ஒன்று சேரவும் பலத்த எதிர்ப்பினிடை, பிரிட்டிஷ் தொழிற்கட்சி அரசாங்கம் மனிதாபிமானத்துடன் அனுமதித்துள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. அதே மனிதாபிமானத்துடன் இலங்கை அரசும் செய்ய முன்வரவேண்டிய சமயம் வந்துவிட்டது.

## ராதாகிருஷ்ணன் பத்திரிகைகளை விரும்பி படிக்கிறார்

சென்னை, ஜூலை 1

சுகவீனமுற்றிருக்கும் முன்னாள் ஜனாதிபதி டாக்டர் ராதாகிஷ்ணன் உடல் நிலை குறித்து அவரைக்கவனித்து வரும் டாக்டர்கள் திருப்தி தெரிவித்துள்ளனர்.

அவர் இப்பொழுது தெரிந்தமாக குணமடைந்துவருகிறார். பத்திரிகைகளை அக்கறையுடன் படிக்கிறார் உற்சாகமாக இருக்கிறார் என்று டாக்டர்கள் கூறினார்கள்.

## நிற்சாமத்தில் —

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

என்றும் பலவிடுகள் வெறிச்சோடிக் கிடப்பதைப் பொலிசார் அவதானித்ததாகவும் கூறப்படுகிறது.

பொலிசாரால் தேடப்பட்ட நால்வரில் ஒருவரே நேற்று முன்தினம் துப்பாக்கிச் சூட்டின்போது பலியானதாகப் பொலிசார் கூறினர். நேற்று அதிகாலை 5 மணிமுதல் 9 மணிவரை பொலிசாரின் இச்சோதனை நடந்தது. சங்காலை, நிற்சாமம், சித்தங்கேணி, வடலியடைப்புப் போன்ற பகுதிகளின் முக்கிய சந்திகளில் ஆயுதந்தாங்கிய பொலிசார் நிறுத்தப்பட்டிருந்தனர். ..... (ஈ)

## நவாலியில் இன்று மடுமாதா பவனி

யாழ்ப்பாணம், செவ். நவாலி சென். பீற்றேஸ் ஆலய விழாவும் சென். பீற்றேஸ்கழக ஆண்டு விழாவும் தொடர்பாக இன்று செவ்வாய்க்கிழமை காலை பாடற் பூசையும் மடுமாதா பவனி வருதலும் இடம்பெறும்.

விழாக்கள் கடந்த 28-ம் திகதி ஆரம்பமானது. அன்று யாழ். ஆயர்லோரன்ஸ் அதிவந்தி போகுப்பிள்ளை ஆராதனை நிறைவேற்றினார். (அ)

## கூ. சங்கத்தில் பாடப் புத்தகங்கள்

கொழும்பு, திங்கள் பாடசாலைப் புத்தகங்கள் இனிமேல் கூட்டுறவு சங்கங்கள் மூலமே விற்பனை செய்யப்பட இருக்கிறது.

இப் பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அலுவலகத்தில் 1974-ம் ஆண்டு ஜூலை மாதம் 1-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
[illegible] No. 63, [illegible] Yalpanam
[illegible] Telephone: 8[illegible]

## 2 வருடத்தில் உலக சந்தையில் பொருட்களின் விலையேற்றம்!

கொழும்பு, திங்கள்.

இலங்கைக்கு இறக்குமதியாகும் அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் உலகசந்தையில் 1972 ஜூன் மாதத்திற்கும், 1974 ஜூன் மாதத்திற்கும் இடையில் பெரும் அதிகரிப்பை ஏற்படுத்தியுள்ளதாக வர்தக அமைச்சின் அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இருவருடங்களில் ஏற்பட்ட விலைமாற்ற விபரம் வருமாறு:—

| | 1972 | | 1974 |
|---|---|---|---|
| அரிசி: | 34 பவுன் ஸ்டேலிங் | ... | 183 பவுன் ஸ்டேலிங் |
| மா: | 42 பவுன் ஸ்டேலிங் | ... | 124 பவுன் ஸ்டேலிங் |
| சீனி: | 74 பவுன் ஸ்டேலிங் | ... | 245 பவுன் ஸ்டேலிங் |
| மை. பருப்பு: | 82 பவுன் ஸ்டேலிங் | ... | 250 பவுன் ஸ்டேலிங் |
| நி. கடலை: | 54 பவுன் ஸ்டேலிங் | ... | 117 பவுன் ஸ்டேலிங் |
| பூடு | 127 பவுன் ஸ்டேலிங் | ... | 240 பவுன் ஸ்டேலிங் |
| மல்லி: | 84 பவுன் ஸ்டேலிங் | ... | 113 பவுன் ஸ்டேலிங் |
| சீரகம்: | 192 பவுன் ஸ்டேலிங் | ... | 501 பவுன் ஸ்டேலிங் |

## இந்திய கடன் அரிசியை இலங்கை திருப்பிக் கொடுக்கிறது

கொழும்பு, திங்கள்

இந்தியாவிலிருந்து கடனாகப் பெற்ற அரிசியை விரைவில் இலங்கை அரசு திருப்பிக் கொடுக்கவுள்ளது. தென்பிராந்தியம் பர்மாவிலிருந்து இலங்கை வந்துகொண்டிருக்கும் ஐயாயிரம் தொன் அரிசி இன்று கொச்சித் துறைமுகத்தில் இறக்கப்படவுள்ளது.

கடந்த மே மாதம் இந்தியாவிலிருந்து ஏழு யிரம்தொன் அரிசி கடனாகப்பெறப்பட்டது. இக்கடனை திருப்பிக் கொடுக்கும் கால எல்லை இம்மாதம் 15ம் திகதியுடன் முடிவடைகிறது.

இன்று ஐயாயிரம்தொன் அரிசி திருப்பிக்கொடுக்கப்படுகிறது. மிகுதி 2ஆயிரம்தொன் அரிசியும் உள்ளூரில் உற்பத்திசெய்யப்பட்டவற்றிலிருந்து பெறப்பட்டு இம் மாதம் 15ம் திகதிக்கு முன்னர் திருப்பிக் கொடுக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

.....

## 18 பஸ்களுக்கு உதிரிப்பாகமில்லை

பருத்தித்துறை, திங்

பருத்தித்துறை இ.போ.ச. டிப்போவில் 18 பஸ்கள் உதிரிப்பாகங்கள் இன்றி சேவையில் ஈடுபடுத்த முடியாமல் தேங்கிக் கடக்கின்றன.

இதன் காரணமாக பருத்தித்துறை—நாகர்கோவில் பஸ் சேவை உட்பட பல சேவைகள் நிறுத்தப்பட்டதுடன் சில சேவைகளிற் பஸ்களின் எண்ணிக்கை குறைக்கப்பட்டுள்ளதாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org